**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, பி.எஸ்.சி., எல்.எல்.எம்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**2057 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13 ம் நாள்**

**அ.வ.எண்.169/2019**

**TNCB-13000312-2019**

1) தற்போது பொள்ளாச்சி டவுண், மகாலிங்கபுரம், 23 விஜயராகவன் வீதியில் இருக்கும், இந்து, மதம், லேட். ரமேஷ் அவர்களின் மகன் சுமார் 26 வயதுள்ள R. சுதர்சன்

2) தற்போது பொள்ளாச்சி டவுண், மகாலிங்கபுரம், 23 விஜயராகவன் வீதியில் இருக்கும், இந்து, மதம், லேட். ரமேஷ் அவர்களின் மகன் சுமார் 46 வயதுள்ள R. ஜெயந்தி

... வாதிகள்

/எதிர்/

1) பொள்ளாச்சி டவுண், ஜுபிலி கிணறு வீதி, கதவு எண் பழையது 63, புதிய எண்.23-ல் இருக்கும் நடராஜ் அவர்களின் வைப்பு நங்கை முழு வயதுள்ள மணிமேகலை

2) பொள்ளாச்சி டவுண், ஜுபிலி கிணறு வீதி, கதவு எண் பழையது 63, புதிய எண்.23-ல் இருக்கும் நடராஜ் அவர்களின் வைப்பு நங்கை மணிமேகலை மகன் முழு வயதுள்ள நித்யா ப்ரியா ... பிரதிவாதிகள்

தாவா சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 09.05.2016ம் தேதியன்று எழுதி பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் 3900/2016 எண்ணாக பதிவாகியுள்ள தாவா பொது அதிகார ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கேட்டும் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதியாவது அவரது ஆட்கள்

உள்ளிட்டவர்களாவது எக்காலத்திலும் எவ்விதத்திலும் வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தாமல் இருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII, விதி 1-ன் படி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 03.06.2019

தாவா வியாஜ்ஜிய மூலம் 10.06.1983, 13.06.1983, 01.09.1984, 17.05.2005, 18.03.1977, 20.09.2014, 09.05.2016, மற்றும் 30.05.2018 தேதிகளில் ஆரம்பம்.

தாவா மதிப்பு ரூ.6000/- இதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் ரூ.180/- தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 25 (d) மற்றும் 27(c)-ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

**<u>தாவா மதிப்பு விவரம்</u>**

| | | |
|---|---|---|
| வாதிகள் கோரும் பரிகாரம் 'அ 'விற்கு தாவா மதிப்பு | ரூ.5,000/- | |
| தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 25(d)ன் படி செலுத்தப்படும் நீதிமன்றக் கட்டணம் | | ரூ.150/- |
| வாதிகள் கோரும் பரிகாரம் 'ஆ' விற்கு தாவா மதிப்பு | ரூ.1,000/- | |
| தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 27(c)ன் படி செலுத்தப்படும் நீதிமன்றக் கட்டணம் | | ரூ.30/- |

இவ்வழக்கானது, கடந்த 03.06.2019 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 07.06.2019 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, 18.03.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. மகாதேவன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்கள்

முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

## செலவுத்தொகை பட்டியல்

**வாதிகள் தரப்பில்** | **பிரதிவாதிகள் தரப்பில்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வக்காலத்து ஸ்டாம்பு | ரூ. | 10.00 | | | |
| கட்டளை ஸ்டாம்பு | ரூ. | 15.00 | | | |
| தாவா ஸ்டாம்பு | ரூ. | 180.00 | | | |
| மொத்தம் | ரூ. | 205.00 | | | |

## தீர்ப்பாணை

1. **முடிவில்**, வழக்கு அனுமதிக்கப்பட்டு தாவா சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 09.05.2016ம் தேதியன்று எழுதி பொள்ளாச்சி சார் பதிவாளர் அலுவலகத்தில் 3900/2016 எண்ணாக பதிவாகியுள்ள தாவா பொது அதிகார ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதியாவது அவரது ஆட்கள் உள்ளிட்டவர்களாவது எக்காலத்திலும் எவ்விதத்திலும் வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தாமல் இருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தீர்ப்பளிக்கப்படுகிறது.

செலவுத் தொகை இல்லை.

## சொத்து விபரம்

1வது அயிட்டம்:

பொள்ளாச்சி சப்டி, பொள்ளாச்சி டவுன். ஜூபிலி கிணர் ரோடு கதவு நெ.63 உள்ள வீட்டின் தரைமட்டக் கட்டிட பாகம் மட்டும்.

2-வது அயிட்டம்:-

பொள்ளாச்சி சப்டி, பொள்ளாட்சி டவுன். ஜூபிலி கிணர் ரோடு. கதவு நெ.63 உள்ள வீட்டின் மேல் மாடி தார்சு கட்டிடம் (மெத்தைப்படிகள்) சகிதம்

3-வது அயிட்டம்:

பொள்ளாச்சி டவுன். தலைமை தபால் ஆபீசிற்கு எதிர்புறமுள்ள முன்பு பிரட்டி உறவுஸ், இந்தியா சில்க் உறவும் (தற்போது ஊேறாட்டல் ரமணாஸ்) ஆகிய கடைகள் அமைந்துள்ள தரைமட்ட தார்சுக் கட்டிட பாகம். பாலக்காடு ரோடு. கதவு நெ.51-க்கு கட்டுப்பட்டது.

4-வது அயிட்டம்:

பொள்ளாச்சி டவுன். தலைமை தபால் ஆபீசிற்கு எதிர்புறமுள்ள பாலக்காடு ரோடு, கதவு எண்.51 உள்ள கட்டிடத்தில் முதல் மாடி உள்ள கட்டிட பாகம் மட்டும் ஷ கட்டிடத்தில் பெடரல் பாங்க் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தற்போது ஷ கட்டிடத்தில் மணப்புரம் பைனான்ஸ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. முதல் மாடிக்குச் செல்ல உள்ள மாடிப்படிகள் சகிதம்.

5-வது அயிட்டம்:-

பொள்ளாச்சி டவுன், தலைமை தபால் அலுவலகத்திற்கு எதிரிலுள்ள பாலக்காடு ரோடு கதவு நெ.51 கட்டிடத்தில் 2-ம் மாடி, 3-ம் மாடி கட்டிடத்தில் தற்போது ரமேஷ் லாட்ஜ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மாடிக்குச் செல்ல உள்ள மாடிப்படிகள் சகிதம், இனி மேலும் 3-ம் மாடிகளின் மேல் செய்யும் அபிவிருத்திகள் சகிதம்.

"பி" ஷெட்யூல்

முன்பு திருப்பூர் பதிவு மாவட்டம் தற்போது கோயமுத்தூர் பதிவு மாவட்டம். பொள்ளாச்சி தாலூக்கா, கஸ்பா பொள்ளாச்சி டவுன். டவுன் சர்வே வார்டு 1, ஒன்று 102 நெ. பட்டா டா.சா.494 ந.புஞ்சை ஏக்கர் 9.28-க்கு தீர்வை ரூபாய் 10.39 இந்த பூமியும். இதில் உள்ள துரஸ்து கிணர் ஒன்றும் 5 எச்.பி. மின் மோட்டர் பம்பு செட் ஒன்றும் சர்வீஸ் கனெக்சன் டெபாசிட் தொகை சகிதம் பின்னும் டா.சா.493/4 நெ. காலை அதாவது குப்புசாமிக்கவுண்டர் பூமிக்கும் வடக்கும் கிழக்கும் டா.சா.494-க்கும் தெற்கு டா.சா.543-க்கும் மேற்கு. இதன் மத்தியில் உள்ள புஏ.1.27 ஆக காலைகள் 2-க்கு ஒட்டு பு.ஏ.10.55 உள்ள பூமியும். ஷ பூமிக்கு உடுமலைப்பேட்டை ரோட்டிலிருந்து பா.சா.554 நெ. காலையில் மில்லின் கிழபுரமும் தென்வடலாகவும். கிழமேலாகவும் டா.சா.552/1A நெ. காலையில் மேல்புறம் எப் லைன் ஓரமாகவும் 14 அடி அகலத்தில் விடப்பட்டுள்ள வண்டித்தடத்தில் உங்கள் வண்டி ஆள் கால்நடை வாகனங்கள் வகையறா போகவர உள்ள தடபாத்தியமும் டா.சா.494-ல் உள்ள பட்டா பள்ளத்தில் தண்ணீர் வசதிக்காக மட்டும் அனுபவித்துக் கொள்ளும் பாத்தியம் நம் இருதரப்பாருக்கும் உண்டு. மேலே இதில் கண்ட சொத்துக்களைக் காட்டும் (2) ஸ்கெட்சுக்கள் இணைக்கப்பட்டிருக்கிறது. அதில் சாகுபடி பாகத்தையும் பள்ளத்து

பாகத்தையும் தனித்தனி கலர் கொடுத்து காண்பிக்கபட்டிருகிறது.

<u>சி ஷெட்யூல்</u>

திருப்பூர் (தற்போது கோயமுத்ழர் ரிடிடு, பொள்ளாச்சி ரிசப்டி பொள்ளாச்சி தாலூக்கா கஸ்பா பொள்ளாச்சி முனிசிபல் டவுனில் டவுன் சர்வே வார்டு 5. கச்சேரி வீதியில் கிழமேல் வீதிக்கும் தெற்கு பள்ளிவாசல் காலியிடத்திற்கும் வடக்கு ராமலிங்கம் செட்டியார் வீட்டிற்கும் கிழக்கு குப்புசாமி ராவுத்தர் வகையறா வீட்டிற்கும் மேற்கு இதன் மத்தியில் உள்ள வடபுரம் கிழமேலடி 70. தென்புறம் கிழமேலடி 60, இருபுரமும் தென்வடலடி 52 இந்த அளவு 3380 சதுரடி வீஸ்திரணமுள்ள இடமும் இதில் வடக்குப் பார்த்த (3) மூன்று மாடிகள் வைத்து கட்டியுள்ள தார்சு கட்டிடமும், இதிலுள்ள சகலமான ரூம்களும் வடக்குப் பார்த்துள்ள இரண்டு கடைகளும் கதவு நிலவு கிணறும் மின் இணைப்பும் வைப்பும் இவைகளின் சர்வீஸ் கனெக்சன் டிபாசிட் துகையும் சகிதம் . ஷ சொத்து டவுன் சர்வே வார்டு 5, டி.எஸ்.எண்.656-ல் கச்சேரி வீதியில் உள்ளது. கதவு எண் பழையது 11 முதல் 138. புதிய எண். 138, 139, 140, 141.

திருப்பூர் (தற்போது கோயமுத்தூர்) ரிடிடு. பொள்ளாச்சி ரிசப்டி, பொள்ளாச்சி தாலூக்கா கஸ்பா பொள்ளாச்சி முனிசிபல் டவுனில் டவுன் சர்வே வார்டு 1 (ஒன்று) 102-ம் நெம்பர் பட்டா T.S.No.494 புஞ்சை ஏக்கர் 9.28-க்கு தீர்வை 10.39. இந்த பூமியும். இதில் உள்ள துருஸ்து கிணர் ஒன்றும் 5 H.P.எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட் ஒன்றும். சர்விஸ் கனெக்சன் டெபாசிட் தொகை சகிதம் பின்னும், T.S.No.493/4 நெ. காலை அதாவது குப்புசாமி கவுண்டர் பூமிக்கும் வடக்கும். கிழக்கும். T.S.No.494-க்கும் தெற்கு T.S.No.543-க்கும் மேற்கு. இதன் மத்தியில் உள்ள பு.ஏக்கர் 1.27 ஆக காலைகள் 2-க்கு ஒட்டு புஞ்சை ஏக்கர் 10.55 உள்ள பூமியும், ஷ பூமிக்கு உடுமலைப்பேட்டை ரோட்டிலிருந்து T.S.No.554 நெ.காலையில் மில்லின்

கிழபுரமும் தென்வடலாகவும் கிழமேலாகவும் T. S. No.552/1A நெ. காலையில் மேல்புறம் எப் லைன் ஓரமாகவும் 14 அடி அகலத்தில் விடப்பட்டுள்ள வண்டித்தடக்கில் உங்கள் வண்டி, ஆள் கால்நடை வாகனங்கள் வகையறா போக வர உள்ள தடபாத்தியமும் T.S.No.494-ல் உள்ள பட்டா பள்ளத்தில் தண்ணீர் வசதிக்காக மட்டும் அனுபவித்துக் கொள்ளும் பாத்தியமும் நம் இரு தரப்பாரும் உண்டு. மேலே இதில் கண்ட சொத்துக்களைக் காட்டும் 2 ஸ்கெட்ச்சுகள்இணைக்கப்பட்டிருக்கிறது. அதில் பாதி பாத்தியத்தையும், பள்ளத்து பாகத்தையும் தனித்தனி கலர் கொடுத்து காண்பிக்கப்பட்டிருக்கிறது

திருப்பூர் (தற்போது கோயமுத்தூர்) ரிடிடு பொள்ளாச்சி ரிசப்டி பொள்ளாச்சி தாலூக்கா. கஸ்பா பொள்ளாச்சி முனிசிபல் பழைய வார்டு 4, புதிய வார்டு 14. கிழமேல் ரோட்டிற்கும் தெற்கு. தென்வடல் ரோட்டிற்கும் கிழக்கு. நாகபோயன் வீட்டிற்கு வடக்கு. எனக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கும் மேற்கு. இதன் மத்தியில் உள்ள 6 விட்டமுள்ள 5 அங்கண கிழக்கு இரட்டை தலைவாசல் உள்ள கள்ளிக்கோட்டை ஓடு போட்ட வில்லை வீடும். இதன் முன்பாக ஒருதலை வில்லை காப்பும் கொட்டமும் இவைகளடங்கிய கதவு. நிலவு கட்டுக்கோப்பு முன் வாசல் வடக்குப்பார்த்தும் சகிதம். டோர் நெ.59 சர்வே வார்டு T.S.No. 1104 மேற்படி வீட்டுக்கு தென்புறம் உள்ள என்னுடைய வீட்டின் தோணி தண்ணீர் ஷ 59 நெ. வீட்டின் வழியாக போவதால் அதை மாமூல்படி எப்பொழுதும் போல் விட்டு விட வேண்டியது. தவிர. என்னுடைய 12-ம் நெம்பர் வீட்டு சுவற்றை பூசிக் கொள்ள உன்னுடைய இடத்தின் வழியாக எப்போதும் போய் வர விட்டு விட வேண்டியது.

2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற

முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

---

**தீர்ப்பாணை**

அ.வ.எண். 169/2019

தேதி : 27.03.2026

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

---